# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 33/2011

Deposition of witness for: PW -5

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமகிருஷ்ணன் | Father/Husband Name | : நல்லசெல்லான் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.11.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 6th day of 2024.

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)

முதல் விசாரணை:

நான் தற்போது ஏ.வல்லாளபட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். வெள்ளையன் மனைவி சரஸ்வதி எனக்கு தெரியும் எதிரி உமாபதியை தெரியும். எதிரி உமாபதி எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவராக இருந்தார். இந்த வழககினை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கினை பற்றி நான் விசாரித்துதெரிந்துகொள்ளவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது).

04.04.2011ம் தேதி அதிகாலை சுமார் 2.15 மணிக்கு ஏதோ சட்டம் கேட்டு நான் கட்சி தேர்தல் பணிக்குழு தலைவராக இருக்கும் வெள்ளையன் என்பவரது வீட்டிற்கு சென்றேன் என்றும், அப்போது அதிமுக கட்சியை சேர்ந்த எதிரி உமாபதி, கருப்பணன் மகன் தவமணி ஆகியோர் அரிவாளுடனும் மற்றும் எனக்கு தெரிந்து சுமார் 4 எதிரிகள் முகம் தெரிந்த பெயர் தெரியாத 30 நபர்கள் வெள்ளையன் வீட்டின் கதவினை தட்டி ஜன்னல் வழியாக சரஸ்வதி பார்த்து என்ன விசயம் என்று கேட்டதாகவும், அப்போது எதிரிகள் வீட்டின் கதவினை தள்ளிக்கொண்டு உள்ளே சென்று, சரஸ்வதியை அசிங்கமான வார்த்தைகளால்

திட்டி கீழே தள்ளி, அவருக்கு காயம் ஏற்படுத்தியதாகவும், அவரது வீட்டின் கேட்டின் தாழ்ப்பாள் உடைந்து தொங்கியதாகவும் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக அந்த வீட்டின் மாடியில் இருந்து கீழே வெள்யைன் வந்து ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்றுகேட்டதற்கு எதிரிகள் அவரை அசிங்கமாக பேசி கீழே பிடித்து தள்ளியததில் அவரது நெஞ்சில் ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மேலும் வெள்ளையனும், சரஸ்வதியும் மேற்படி சம்பவம் பற்றி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக நான் தெரிந்து கொண்டதாகவும், போலீசார் என்னை இச்சம்பவம் பற்றி விசாரித்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனது உறவினர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து காப்பாற்றும் நோக்கில் தற்போது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

06.11.2024

STC.No.

வா.சா.1.திரு. த.பெ.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1.